# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 05 /2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1<br>Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சசிகுமார் | தொழில் | : டாக்டர் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : மனோகரன் | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 28.09.2022.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது சொந்த ஊர் எது என்றால் திண்டுக்கல் மாவட்டம் தேவரப்பன்பட்டி ஆகும். உடுமலைக்கு எப்போது வந்தேன் என்றால் நவம்பர் 2010 ல் வந்தேன். நான் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான் அதைத்தவிர வேறு எவ்வித தொழிலும் செய்துவரவில்லை என்றால் சரிதான். இந்த எதிரியை யார் மூலமாக எப்படி தெரியும் என்றால் எதிரி எனது மருத்துவமனைக்கு முன்புறம் கார் வாங்கிவிற்கும் தொழில் செய்து வந்தார் அந்த வகையில் எனக்கு தெரியும். மேலும்எதிரி நோயாளியாகவும் என்னிடம் சிகிச்சைக்கு வந்துள்ளார். எதிரி எனது மருத்துவமனைக்கு எதிர் புறம் என்ன பெயரில் எவ்வளவு வருடங்களாக தொழில் செய்து வந்தார் என்றால் எனது மருத்துவமனைக்கு எதிர் புறம் பெஸ்ட் கார்ஸ் என்ற பெயரில் நான்கு நபர்களுடன் எதிரியும் ஒரு பங்குதாரராக இருந்து அதில் கார் வாங்கி விற்று வந்தார் மேலும் நான் 2010 ல் உடுமலைக்கு வருவதற்கு முன் 15 வருடங்களாகவும் அதற்கு பின்னிட்டு 10 வருடங்களாகவும் மேற்படி தொழில் செய்து வந்தார் என்பதை தெரிந்து கொண்டேன் . சாட்சி தற்போது

எதிரி பங்குதாரராக இருந்து இருந்து பெஸ்ட் கார்ஸ் சில் பணிபுரியவில்லை 4 நபர்களுடன் சேர்ந்து கார் வாங்கி விற்று வந்தார் என்று சாட்சி சொல்கிறர்.

2. மேற்படி அந்த 4 நபர்கள் பெயர் விலாசம் என்ன என்று சொன்னால் ஆஜர் எதிரி செல்வம், வின்சன்ட், பிரதாப் மற்றும் ரவிச்சந்திரன் ஆகிய நான்கு நபர்கள் ஆவார்கள். ஆஜர் எதிரி கணக்கம்பாளையத்தை சேர்ந்தவர். வின்சன்ட் என்பவர் நேரு நகர் சேர்ந்தவர் பிரதாப் என்பவர் ஈபி நகரை சேர்ந்தவர் ரவிச்சந்திரன் என்பவர் ஐஸ்வர்யா நகருக்கு பக்கத்து நகரை சேர்ந்தவர். மேற்படி நான்கு நபர்கள் சேர்ந்து கார் வாங்கி விற்கும் தொழில் செய்து வந்தார்கள் என்பைதை காட்டுவதற்கு என்னிடம் ஆவணம் எதைவும் தாக்கல் செய்ய நான் தயாரா என்றால் நான் பார்த்து சொல்லி தெரிந்து கொண்டேன் ஆவணம் எதுவும் என்னிடம் இல்லை.

3. பிரதாப் என்பவர் உடுமலை தாராபுரம் சாலையில் நத்தி டெக்டெய்ல்ஸ் என்ற பெயரில் ஒரு நிறுவனம் நடத்தி வருகிறார் என்றால் சரிதான் அவரும் அவர் மனைவியுடன் சேர்ந்து நடத்தி வருகிறார். பெஸ்ட் கார்ஸ்சின் புரப்பரேட்டர் வின்சன்ட் என்று சொன்னால் எனக்கு தெரியாது நான்கு நபர்கள் சேர்ந்து நடத்துவதாக சொன்னார்கள். ஆஜர் எதிரியை எந்த ஆண்டில் இருந்து எனக்கு தெரியும் என்றால் நான் இங்கு வந்ததில் இருந்து தெரியும் எவ்வாறு எனில் என் மருத்துவமனைக்கு நேர் எதிரே உள்ளதால் தெரியும் பொதுவாக எனது மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ள நோயாளிகள் சிகிச்சைக்கு வந்து செல்லும் புற நோயாளிகள் ஆகியோரின் விவரங்கள் Register மூலம் பராமரிக்கப்பட்டு வந்துள்ளதா என்றால் 2018 ல்இந்திய Medical Association வழிகாட்டுதல் குறிப்பிட்டதற்கு பிறகுதான் மேற்படி விவரங்களை நாங்கள் பராமரிக்க தொடங்கினோம்.

4. ஆஜர் எதிரி என்னிடம் நோயாளியாக சிகிச்சை பெற்றார் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் என்னிடம் உள்ளதா என்றால் அவர் புறநோயாளியாக சிகிச்சை பெற்றதால் அது பராமரிக்கப்படவில்லை. நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வந்தேனா என்றால் இல்லை. நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் செலுத்தி வருகிறேன். என்னுடைய மருத்துவ தொழிலில் 2016-2018 வரையான காலகட்டத்தில் எனது வருமானம் எவ்வளவு என்றாலும் அதற்காக நான் எவ்வளவு வருமான வரி செலுத்தியுள்ளேன் என்றாலும் நான் எனது வருமான வரி கணக்கை பார்த்தால் தான் தாக்கல் செய்ய முடியும்.

5. என்னுடைய வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய தயாரா என்றால் எனது வழக்கறிஞரிடம் ஆலோசனை செய்து அவரது அறிவுறுத்தலின் பேரில் தாக்கல் செய்வேன். நான் எதிரியை தவிர வேறு நபர்கள் மீது காசோலை மோசடி வழக்கோ பிராமிசரி நோட்டு மூலமான வழக்கோ தாக்கல் செய்துள்ளேனாஎன்றால் இந்த எதிரி பிரதாப் மற்றும்

அவரது மனைவி பிந்துமோள்,வின்சன்ட் ரவிச்சந்திரன் ஆகியோர் மீதும் தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

6. நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் எப்போது எதிரி என்னிடம் பணம் கேட்டார் என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் வழக்கறிஞர் அறிவிப்பை பார்த்தால் தான் தெரியும். என்னிடம் காட்டப்படும் மசாஆ.3 ஆவணத்தில் நான் மேற்படி விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. அதேபோல நான் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பில் எவ்வளவு சதவீத வட்டிக்கு எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் எப்போது பணத்தை திருப்பி செலுத்துவதாக எந்த வித சங்கதியும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

7. மேற்படி சட்ட அறிவிப்பில் எதிரி எப்போது குறிப்பிட்டு கடன் கேட்டார் என்ற விவரத்தையோ அதற்கு எப்போது நான் கடன் கொடுத்தேன் என்று குறிப்பிட்டோ மற்றும் காசோலையை எதிரி எந்த தேதியில் கொடுத்தார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் தேதி குறிப்பிடவில்லை எந்த வாரம் எந்த வருடம் என்பதை குறிப்பிட்டுள்ளேன். நான் எனது புகாரிலும் என்ன வட்டிக்கு எதிரி கடன் கேட்டு எப்போது திருப்பி செலுத்துவதாக கூறினார் என்ற விவரத்தை புகாரில் நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அதேபோல எனது புகாரில் எந்த தேதியில் நான் பணம் கொடுத்தேன் என்ற விவரத்தையும் அதற்கு எதிரி எந்த தேதியில் பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்தார் என்ற விவரத்தையும் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் ஆனால் எந்த வாரத்தில் எந்த மாதத்தில், எந்த வருடத்தில் என்பதை குறிப்பிட்டுள்ளேன்.

8. உண்மையிலேயே நான் எதிரிக்கு கடன் கொடுக்காத காரத்தினால் தான் என்னால் சரியான விவரங்களை குறிப்பிட்டு கூற இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் எதிரி என்னிடம் செப்டம்பர் முதல் வாரத்தில் பணம் கேட்டதாக சொல்லியுள்ளதால் எதிரி கேட்ட உடன் அன்றே பணம் கொடுத்து விட்டேனா என்றால் நான் எதிரி கேட்டதற்கு பிறகு ஒரு வாரம் கழித்து கொடுத்திருப்பேன். எதிரி பணம் கேட்டவுன் நான் கொடுக்காததற்கு என்ன காரணம் என்றால் நான் உடனே கையில் பணம் இல்லாததால் ஏற்பாடு செய்து கொடுத்திருப்பேன். எனக்கு உடுமலையில் எந்தெந்த வங்கியில் வங்கி கணக்கு உள்ளது என்றால் ICICI வங்கி, Axis Bank, HDFC மற்றும் கரூர்வைசியா வங்கி போன்றவற்றில் வங்கி கணக்கு இருந்தது.

9. மேற்படி நான்கு வங்கியில் இருந்தும் ரூ.15,00,000/−வங்கி கணக்கில் இருந்து எடுத்து எதிரிக்கு கொடுத்தபடியான ஆவணம் எதுவும் இருக்காது

என்றால் சரிதான். நான் எதிரிக்கு பணம் கொடுத்தபோது என்னிடம் ரூ.15,00,000/— கையிருப்பு இருந்தது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் பணம் கொடுத்ததாக சொன்ன தேதியில் எதிரியிடம் இருந்து எத்தனை காசோலைகள் வாங்கினேன் என்றால் பணம் கொடுத்த அன்று எதிரி என்னிடம் காசோலை கொடுக்கவில்லை.

10. எவ்வித ஆவணம் இல்லாமல் தான் எதிரிக்கு நான் பணம் கடனாக கொடுத்தேன் என்றால் எதிரி புரோ நோட்டு எழுதி கொடுத்தார். புரோ நோட்டை யார் எழுதினார்கள் என்றால் அவர் எழுதித்தான் கொண்டு வந்தார் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால் அவர்களையும் எதிரி தான் அழைத்து வந்தார். மேற்படி புரோ நோட்டில் சாட்சி செய்த நபர்களின் பெயர் முகவரி என்ன என்று சொன்னால் அதை எதிரி காசோலை கொடுக்கும்போது திரும்ப வாங்கிக்கொண்டதால் எனக்கு தெரியவில்லை. புரோ நோட்டின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் எதிரி அதை வாங்கிக்கொண்டு காசோலை கொடுத்ததால் அது என்னிடம் இல்லை.

11. சென்னை மேடவாக்கத்தில் உள்ள பொன்ராஜ் என்பவர் எனக்கு நண்பரா உறவினரா என்று சொன்னால் அவர் யார் என்று தெரியாது. இந்த எதிரியிடம் இருந்து செக்கியுரிட்டியாக பெற்ற காசோலையை மேற்படி பொன்ராஜ் என்பவர் மூலமாக சென்னையில் ஒரு காசோலை மோசடி வழக்கு எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது உண்மை இல்லை. இதே நீதிமன்றத்தில் நான் பிரதாப் என்பவர் மீது ரூ.82,00,000/— காசோலை மோசடி செய்துவிட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் ஆனால் என்ன தொகை என்பது ஞாபகம் இல்லை. அதேபோல பிரதாப் மனைவி பிந்துமோள் மீது ரூ.25,00,000/— கேட்டு காசோலை மோசடி வழக்கு அவர் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதேபோல வின்சன்ட் மீது ரூ.50,00,000/— கொடுக்க வேண்டும் என்ற கூறி காசோலை மோசடி வழக்கு அவர் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் தொகை எவ்வளவு என்பது ஞாபகம் இல்லை.

12. இந்த எதிரியின் காசோலை எண்.110 யை சென்னையை சேர்ந்த பொன்ராஜ் என்பவரிடம் கொடுத்து அவர் மூலம் ரூ.60,00,000/— எதிரியிடம் கேட்டு காசோலை மோசடி கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது பொய். **(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**